மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பதில் சொல்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயாராக இருக்க வேண்டுமல்லவா?

முனைவர் க. பொன்முடி: அவர்களுடைய கோரிக்கை என்னவென்று சொல்லிவிடுகிறேன், அவ்வளவுதான். கோரிக்கையை சொல்கிறேன், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிந்துகொள்ளட்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சுருக்கமாக இரண்டு வரிகளில் சொல்லுங்கள்.

முனைவர் க. பொன்முடி: சுருக்கமாகச் சொல்கிறேன். கரும்பு டன்னுக்கு 2,850 ரூபாய் என்று அறிவித்திருந்தாலும், 2,425 ரூபாய்தான் வழங்கப்படுகின்றது. அவர்கள் 4 ஆயிரம் ரூபாய் டன்னுக்கு கொடுக்க வேண்டுமென்று கேட்கின்றார்கள். தேர்தல் வாக்குறுதியிலே 3,500 ரூபாய் தருவதாகச் சொல்லியிருக்கிறோம். இந்த 2,850 ரூபாயை குறைந்தபட்சம் 3,500 ரூபாயாக உயர்த்தித் தர வேண்டுமென்று அவர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். ஆக, தென்னிந்திய கரும்பு விவசாயிகள் சங்கத்தினை அழைத்துப் பேசி, கரும்பு விவசாயிகளுடைய கோரிக்கையை நீங்கள் பணிவுடன் கவனிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(ஆ) திருவிடைமருதூர் தொகுதி, அணைக்கரை ஊராட்சி, முதலை கடித்ததால் உயிரிழந்தவருக்கு நிவாரண உதவி மற்றும் முதலைப் பண்ணை அமைக்கக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள், நீங்கள் என்ன கொடுத்திருக்கிறீர்களோ, சுருக்கமாக அதைச் சொல்லுங்கள்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதிக்குட்பட்ட திருப்பனந்தாள் ஒன்றியத்தில் அணைக்கரை ஊராட்சியில் கொள்ளிடம் ஆறு அமைந்துள்ளது. கொள்ளிடம் ஆற்றுப் பகுதியில் 200–க்கும் மேற்பட்ட முதலைகள் இருக்கின்றன. 3 ஆம் தேதி காலை ஏழு மணிக்கு செல்லதுரை என்பவர் குளிக்கச் சென்ற நேரத்தில் முதலை கடித்து, நீர் பகுதிக்கு இழுத்து சென்றுவிட்டது. ஒரு மணி நேரம் தேடி, மீன் பிடிக்கும் வலைமூலம் அவருடைய சடலம் எடுக்கப்பட்டது. இன்றைக்கு

2017 ஜூலை 5] [முனைவர் கோவி. செழியன்]

அவரை இழந்து வாடுகின்ற அந்தக் குடும்பத்திற்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து அல்லது வனத் துறைமூலம் 10 இலட்சம் ரூபாய் தற்காலிக நிதியாகவும், குடும்ப உறுப்பினர் ஒருவருக்கு வேலையும் வழங்கக் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய நீண்டநாள் கோரிக்கையான அங்கு முதலைப் பண்ணை அமையுங்கள் அல்லது அங்கு இருக்கக்கூடிய 200–க்கும் மேற்பட்ட முதலைகளை முட்டுக்காடு முதலைப் பண்ணைக்குக் கொண்டு சென்று, விவசாயப் பெருங்குடி மக்களை பாதுகாத்துத் தாருங்கள் என்ற கோரிக்கையை வைத்து, அவையின் கவனத்தை ஈர்த்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்வார்களா, வனத் துறை செய்யுமா என்று கேட்டு அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொண்டிருக்கின்றேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், திருப்பனந்தாள் சரகம், 15, விநாயகர் தெரு கிராமத்தைச் சேர்ந்த திரு. சின்னையன் என்பவரின் மகன், திரு. செல்லதுரை என்பவர் 3–7–2017 அன்று அணைக்கரை பாலம், கொள்ளிடம் ஆறு தென்கரையில் நீர்த்தேக்கப் பகுதிக்குச் சென்றபோது, நீர்த்தேக்கப் பகுதியில் உள்ள முதலை தாக்கியதால் உயிரிழந்தார் என்ற செய்தியறிந்து நான் மிகவும் துயரம் அடைந்ததோடு, மேற்படி சம்பவத்தில் உயிரிழந்த செல்லதுரை என்பவரின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் குடும்பத்திற்கு 4 இலட்சம் ரூபாய் வனத் துறைமூலம் உடனடியாக வழங்கவும் நான் உத்தரவிட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதனடிப்படையில், அன்னாரின் குடும்பத்திற்கு 4 இலட்சம் ரூபாய் நேற்று 4–7–2017 அன்று மாலை வழங்கப்பட்டுள்ளது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) தென்னிந்திய கரும்பு விவசாயிகள் சங்கம், உண்ணாவிரதம் இருப்பது—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.